

श्रीचन्द्रशेखरजयेन्द्र – शङ्करेत्याकृतित्रितयभृत् त्रयीव य : ।

कामकोटिपदभूषणो गुरुः भाष्यकृत् कुवलयं पुनातु सः ।।

ஒரே வேதமானது ரிக் - யஜுஸ் - ஸாம என்று மூன்று விதமாக உள்ளது போல் ஒரே
ஆதிசங்கரர் - ஸ்ரீ சந்திரசேகரர் - ஸ்ரீ ஜயேந்திரர் - ஸ்ரீ சங்கர விஜயேந்திரர்
என்று மூன்று வடிவமாக ஸ்ரீ காமகோடி பீடத்தை அலங்கரித்துக் கொண்டு பாஷ்யம்
எழுதியவராக இருந்து கொண்டு உலகமனைத்தையும் புனிதமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.



மேற்கண்ட ச்லோகமானது ஸ்ரீ மஹாபெரியவாள் அவர்களால்
ப்ரம்மஸ்ரீ முல்லைவாசல் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளிடம்
காமாக்ஷி, ஆதிசங்கரர் மற்றும் மூன்று பெரியவர்களை பற்றியும், ஒரே ச்லோகமாக
சொல்லப்பட்டு V.T ராஜன் & Co., காலண்டரில் வெளியிடப்பட்டது.

# दुर्गा पञ्चरत्नम् ।।

ते ध्यानयोगानुगता अपश्यन् त्वामेव देवीं स्वगुणैर्निगूढम् ।
त्वमेव शक्तिः परमेश्वरस्यामां पाहि सर्वेश्वरि मोक्षदात्रि ।। १ ।

They Dyana YoganuGatha apasyan Thwameva Devim swagunir nekutam
Thwameva Sakthi Parameshwarisya Mam pahi sarveshwari Moksha datri.

ஏ தேவி! தன் முக்குணங்களால் மறைந்துள்ள பரமேச்வரரின் சக்தியான உன்னை மஹரிஷிகள் த்யான யோகத்தில் ஆழ்ந்திருந்து கண்டுபிடித்தனர். அத்தகைய ஈச்வரியான மோக்ஷம் தருபவளான தேவியே என்னை காப்பாற்று.

देवात्मशक्तिः श्रुतिवाक्यगीता महर्षिलोकस्य पुरः प्रसन्ना ।
गुहा परं व्योम सतः प्रतिष्ठा मां पाहि सर्वेश्वरि मोक्षदात्रि ।। २ ।।

Devatma sakthi sruthivakya gita Maharshilokasya pura prasanna
Guha param vyoma sada prathista Mam pahi sarveshwari Moksha datri. 2

ச்வேதாச்ர உபநிஷத்தில் தேவாத்மசக்தி என்று கூறப்பட்டுள்ள நீ மஹரிஷி ஜனங்களுக்கு எதிரில் தோன்றினாய் ஸ்ரீ ரூபமான ப்ரம்மத்திற்கு வாஸமான ஹ்ருதய குகையாயுள்ள நீ மோக்ஷம் தருபவளான தேவியே என்னை காப்பாற்று..

पराऽस्य शक्तिः विविधैव श्रूयसे श्वेताश्ववाक्योदितदेवि दुर्गे ।
स्वाभाविकी ज्ञानबलक्रिया ते मां पाहि सर्वेश्वरि मोक्षदात्रि ।। ३ ।।

Paraasyasakthi vividaiga sruyasay Swethashwa vakyothitha devi durge
Swabavikii gyana palakriya Mam pahi sarveshwari Moksha datri. 3

ச்வேதாச்வர உபநிஷத்தில் பரமாத்மாவின் பல திறமுள்ள சக்தியாக கூறப்படுகிறாய். உனக்கு இயல்பாகவே ஞானம், பலம், செயல்கள் உள்ளன. அத்தகைய மோக்ஷம் தருபவளான தேவியே என்னை காப்பாற்று.

देवात्मशब्देन शिवात्मभूता यत्कूर्मवायव्यवचोविवृत्या ।
त्वं पाशविच्छेदकरी प्रसिद्धा मां पाहि सर्वेश्वरि मोक्षदात्रि ।। ४ ।।

Devatma Sapdena shivatma putha Yathkoorma vayavya vacho vivruthya
Thwam pasa vichhethakari prasidda Mam pahi sarveshwari Moksha datri. 4

கூர்ம, வாயு புராணங்களில் விரிவாகக் கூறப்படும் தேவாத்ம சக்தியாகிய சிவாத்யஸ்வரூபமான நீ பந்தபாசங்களை அறுப்பவளாக ப்ரஸித்தியுடையவள். அத்தகைய மோக்ஷம் தருபவளான தேவியே என்னை காப்பாற்று.

त्वं ब्रह्मपुच्छा विविधा मयूरी ब्रह्मप्रतिष्ठास्युपदिष्टगीता ।
ज्ञानस्वरूपात्मतयाखिलानां मा पाहि सर्वेश्वरि मोक्षदात्रि ।। ५ ।।

Thwam brahmma puchha vivetha mayuri Brahmma prathishtasupathishta gita
Gyna swarupatmathaya kilanaam Mam pahi sarveshwari moksha datri 5

பல பல ஆச்சரிய கார்யங்கள் புரியும் ப்ரம்மத்தின் ஆகாரமான, கீதையை உபதேசம் செய்த நீ எல்லோருள்ளும் ஞானஸ்வரூபமாக இருக்கிறாய். அத்தகைய மோக்ஷம் தருபவளான தேவியே என்னை காப்பாற்று.

இந்த செய்யுளை ஸ்ரீ பெரியவாள் கவனம் செய்து நான் எழுதும் போது எனது முக சுணுக்கத்தைப் பார்த்து அதன் பதிலாக கீதாபாஷ்யத்தின் 14ம் அத்யாயத்தினுடைய கடைசி ஸ்லோகமாகிய **ब्रह्मणो हि** என்பதைக் காட்டி, அங்கு ஸ்ரீ ஆதிசங்கரரின் **शक्तिशक्तिमतोः अभेदात्** என்ற சக்தியும் சக்திமானும் வேறல்ல ஒன்றுதான் என்ற ப்ரமாணத்தைக் காட்டி நீ க்ருஷ்ணனும் ப்ரம்மம் பராசக்தியும் ஒன்றானதால் காமாக்ஷி தான் கீதோபசேதம் செய்தாள் என்று கூறியது தவறில்லையே! என்று என்னிடம் நிரூபித்ததானது எனது வாழ்க்கையில் ஒரு பெரும் சக்தியே அறிந்த ஆச்சரியம் வர்ணிக்க முடியாதது.

"பெரியவா....எழுதினதை, நா.....பூர்த்தி பண்றதா? எனக்கு ஸ்லோகம் எல்லாம் வராதே பெரியவா!..' காமாக்ஷி உபதேஸித்த பகவத்கீதைங்கிற "துர்க்கா பஞ்சரத்னம்"... தேனம்பாக்கத்தில் பெரியவா தங்கியிருந்த ஸமயம். அன்று, குரு ஆராதனை நாள்! மத்யானம் ரெண்டு மணிக்கு, பெரியவா.... அங்கிருந்த குளத்தின் ஜலத்தில் உள்ள ஜீவராசிகளுக்காக, ப்ரத்யேகமாக, தன்னுடைய ஒரு பாதத்தை ஜலத்துக்குள் வைத்துக் கொண்டு, குளக்கரையில் அமர்ந்து இருந்தார். பெரியவாளின் அத்யந்த பக்தரான, மைலாப்பூர் டாக்டர் க்ருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகளும் அன்று ஆராதனையில் ஒரு ப்ராஹ்மணராக வரிக்கப்பட்டிருந்தார். புது வஸ்த்ரம் கட்டிக்கொண்டு உள்ளே போக இருந்தவரை, பெரியவாளின் 'சொடக்கு' அழைத்தது! பெரியவாளிடம் ஓடினார்! 'ஒரு பேப்பர், பேனா எடுத்துண்டு வந்து... இங்க ஒக்காரு!....... 'ஓடிப்போய் பேப்பர், பேனா ஸஹிதம், பெரியவாளுக்கருகில் பவ்யமாக அமர்ந்தார் ஸாஸ்த்ரிகள்.

அழகான ஸம்ஸ்க்ருதத்தில் ஒவ்வொரு வார்த்தையாக வாக்தேவியின் வாக் அம்ருதம் பொழிந்தது....! எழுதிக்கொண்டே வந்தார் சாஸ்த்ரிகள். சில இடங்களில் அர்த்தத்தை மட்டும் சொல்லி, அதற்கான ஸம்ஸ்க்ருத வார்த்தையை, சாஸ்த்ரிகளையே சொல்லச் சொல்லி, எழுதச் சொன்னார். எழுதி முடித்ததும் பார்த்தால்....... அருமையான ஸ்துதியாக 'துர்க்கா பஞ்சரத்னம்' உருவாகியிருந்தது! 'ஸ்ரீமதி M.S. ஸுப்புலக்ஷ்மியின் அம்ருதமான சாரீரத்தில், நாம் கேட்டு மகிழும் துர்க்கா பஞ்சரத்னம். ஒவ்வொரு ச்லோகமும் 'மாம் பாஹி ஸர்வேஸ்வரி மோக்ஷதாத்ரி' என்று முடியும்படியாக இருக்கும். காஞ்சியில் காமாக்ஷி கோவிலில் ஸன்னதிக்கு வெளியே பளிங்குக் கல்லில் இந்த ஸ்லோகம் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு இடத்தில் பெரியவா, 'உபதிஷ்ட கீதா' என்று, பெரியவா... கூறினார். அம்பாளை பார்த்து...'நீ.. கீதையை உபதேஸித்தவள்' என்று கூறுவதாகும். சாஸ்த்ரிகள் எழுதிக் கொண்டே வந்தபோது, 'உபதிஷ்ட கீதா' என்று பெரியவா சொன்னதும், கொஞ்சம் யோஜித்தார்.

'ஏன்?....ஒனக்கு.. காமாக்ஷி கீதோபதேஸம் பண்ணினதா சொல்றது, ஸரியில்ல...ன்னு தோண்றதோ...?'

சிரித்துக் கொண்டே கேட்ட ஜகத்குருவுக்கு, சிரிப்பையே அர்ப்பணித்தார் சாஸ்த்ரிகள்.

பக்கத்திலிருந்த பாரிஷதரிடம், 'கீதா பாஷ்யத்த.... கொண்டா.....' எட்டு உரைகளோடு கூடிய கீதா பாஷ்யம் புஸ்தகம் வந்தது! பெரியவா அதை, ஒரு குழந்தையைத் தூக்குவது போல் தூக்கி, அதை நளினமாகப் புரட்டியதும், முதல் திருப்பலிலேயே....ஏதோ ஒரு பக்கம் 'காத்திருக்கிறேன்! ஜகத்குரோ!' என்பது போல், பெரியவாளுக்கு வேண்டிய விஷயத்தை தந்தது!

சாஸ்த்ரிகளிடம் அந்தப் பக்கத்தை காட்டி, 'இந்த ச்லோகத்தையும், அதோட பாஷ்யத்தையும் படி...' 'ப்ரஹ்மணோஹி ப்ரதிஷ்டாஹம்........ மாறாத, அழியாத ப்ரஹ்மத்துக்கு, சக்தியான மாயைதான், ப்ரதிஷ்டை! எதனால் ப்ரஹ்மமானது... பலவித உலகமாகப் பரவுகிறதோ, அது, ப்ரதிஷ்டை எனப்படுகிறது. அது நான்! நானே ப்ரஹ்மம்! நானே அதன் ப்ரதிஷ்டை என்பதும் பொருந்தும்.

ஏனென்றால், 'சக்தி சக்திமதோ: அபேதாத்' சங்க்தியும், அதை உடையவனும் வேறுபட்ட தத்துவமில்லை என்று பாஷ்யம் உள்ளது......' பெரியவா அழகாக சிரித்துக் கொண்டே... சொன்னார்... 'காமாக்ஷிதான்... ப்ரஹ்மத்தோட சக்தி? 'த்வமஸி பரப்ரஹ்ம மஹிஷி'!

சக்திதான்... ப்ரஹ்மம்? அதுனால, கீதையை காமாக்ஷி உபதேசிச்சா... உபதிஷ்ட கீதா.....ன்னு சொல்றது ஸெரிதான? ....'பெரியவாளை ரஸிப்பதா? பெரியவாளின் அம்ருதமயமான பாஷ்யத்தை ரஸிப்பதா? என்று ஸாஸ்த்ரிகள் மெய்மறந்த நிலையில் இருந்தபோது, யாரோ ஒருவர் வந்து, ஆராதனை ப்ராஹ்மணரான சாஸ்த்ரிகளை உள்ளே அழைப்பதாக சொன்னார்.

'தோ...பாரு! இங்க பெரிய சாஸ்த்ர விசாரம் நடக்கறது..... முடிஞ்சுதான் வருவான்... போ! 'பெரியவாளே பதில் சொல்லி, வந்தவரை அனுப்பிவிட்டார். கிட்டத்தட்ட ஒருமணி நேரம் 'துர்க்கா பஞ்சரத்னம்' அலசி ஆராய்ந்து உருவானது! பஞ்சரத்னத்தில், நான்கு ரத்னங்கள்தான் பிறந்திருந்தது...! 'அஞ்சாவது ச்லோகத்தை, இதே... மாதிரி நீ.. எழுது! ஒடன்...னே..... சாப்படறதுக்குள்ள...'

'பெரியவா....எழுதினதை, நா.....பூர்த்தி பண்றதா? எனக்கு ச்லோகம்-ல்லாம் வராதே பெரியவா!..'எல்லாம் வரும்!..போ!...' நமஸ்காரம் பண்ணிவிட்டு, ஆராதனைக்குப் போனார் சாஸ்த்ரிகள். பிறகு ஆராதனை போஜனம் ஆரம்பித்தது.

இந்த போஜன இடத்துக்கு, பெரியவா வந்த 'அழகை' கற்பனையில் கண்டு ரஸிப்போம்... நினைத்து நினைத்து சிரித்து ரஸிக்கும் படியான அழகு!

பழைய தேனம்பாக்கம் கட்டிடத்தில் ரெண்டு பாகமாக, 16+16 என்று ப்ராஹ்மணர்கள், போஜனத்துக்கு அமர்ந்திருந்தனர்.

ஒரு பக்கத்தில் கடைசியாக சாஸ்த்ரிகள் அமர்ந்திருந்த இடத்துக்கு பக்கத்தில், ஒரு சுவர். அதன் அடிபாகத்தில் சதுரமான ஒரு த்வாரம் இருந்தது.

எனவே, யாராக இருந்தாலும், அந்த ரூமுக்குள் வருவதற்கு ரூமின் வாசல் வழியாகத்தான் வரமுடியும். திடீரென்று சாஸ்த்ரிகள் பக்கத்தில் உள்ள சுவற்றின், சதுரமான த்வாரம் வழியாக, 'ஜகத்குரு' தன் தலையையும், தண்டத்தையும் நுழைத்துக்கொண்டு, மெதுவாக தன் முழு சரீரத்தையும் அந்த த்வாரம் வழியாகவே நுழைத்துக் கொண்டு 'ஜங்'கென்று சாஸ்த்ரிகள் முன்னால் நின்றார்! இது என்ன எளிமை! குழந்தைத்தனம்! ஸாஸ்த்ரிகளுக்கு இந்த 'ஸாவத்வார் ...மறக்கவே முடியாத தர்ஸனமாக அமைந்தது!

வெளியே வந்து நின்றதுமே..... 'என்ன? அஞ்சாது ஸ்லோகம் வந்துதா?....' 'இல்ல......பெரியவா' உடனே அங்கேயே ஐந்தாவது ஸ்லோகத்தை ரெண்டு தடவை கூறிவிட்டு, 'ஞாபகமா, நாலு ஸ்லோகத்தோட, இதையும் சேத்து எழுதிக் குடுத்துடு'...... அணோரணீயான், மஹதோ மஹீயான்.....!

1942-43-ல் பெரியவா... வேலூரில் உள்ள, திருப்பதி தேவஸ்தான பள்ளிக்கூடத்தில் தங்கியிருந்தார். ஒருநாள், ஸ்ரீமடத்தின் மானேஜர், எதற்கோ பெரியவாளின் உத்தரவைக் கேட்க வேண்டி, ஒவ்வொரு வகுப்பறையாக பெரியவாளை தேடி கொண்டே போனார். ...... அங்கே ஒரு ரூமில் கதவு லேசாக திறந்திருந்தது! உள்ளே எட்டிப்பார்த்தார் மானேஜர்! ஆச்சர்யம்! அவருடைய மேனியெல்லாம் புளகாங்கிதம் அடைந்தது! பெரியவா.... பூமிக்கு மேலே ரெண்டடி உயரத்தில், அந்தரத்தில் உட்கார்ந்திருந்த நிலையில், ஸமாதியில் இருந்தார்! மூச்சுக்கூட விடாமல், திரும்பி வந்துவிட்டார் மானேஜர். இப்படிப்பட்ட ஸித்திகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட பெரியவா, சுவற்றின் ஓட்டை வழியாக வந்தது, நமக்காகவே! ஸதா அந்த காக்ஷியை மானஸீகமாக நினைத்து நினைத்து ஆனந்தப்படத்தான்! க்ருஷ்ணன் உரலை இழுத்துக் கொண்டு தவழ்ந்ததை இன்று வரை எண்ணி எண்ணி ஸந்தோஷப்படுகிறோமே! அப்படித்தான் இதுவும்!

Jai Ganesh Offset Printers 9840111457